முத்தரசநல்லூர் ஊரட்சி மன்றத்தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு T.ஆதிசிவன்

வீட்டு மனைப்பிரிவு அனுமதி எண்: 1/2023-2024 **நாள்: 13.03.2024**



பொருள்: புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி -அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்-முத்தரசநல்லூர் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்: 3/2A2 இல் கட்டுப்பட்ட ஏக்கர் 0.93 (3750.00 Sqr.mtr.) நிலத்தை 17 மனைகளாக பிரித்து -உத்தேச குடியிருப்ப மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது-மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:

1) திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் ந.க.எண்: YBUU1LP3/18882/ 2023/TCP/2024/ TCP, நாள்: 03.01.2024
2) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994
3) மனுதாரர் திரு R. கணேசன், த/பெ. ராமசாமி கவுண்டர், நெ.3/39, காவேரி நகர், சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி -2 அவர்களின் விண்ணப்பம், நாள்: 04.03.2024
4) முத்தரசநல்லூர் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்:440/நாள்: 13.03.2024

*****

உத்தரவு:

திருச்சிராப்பள்ளி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் முத்தரசநல்லூர் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்: : 3/2A2 இல் கட்டுப்பட்ட ஏக்கர் 0.93 (3750.00 Sqr.mtr.) நிலத்தை 17 மனைகளாக பிரித்து பார்வை 1-ல் காணும் கடிதத்தின் வழி புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி (இணையதளவழி) வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப் பிரிவுக்கு திட்ட அனுமதி எண்: ம.வ.(ந.ஊ.இ.இ.(திமா) எண்: 01/2024 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வளர்ச்சிக் கட்டணமாக ரூ.24,824/- (ரூபாய் இருபத்து நான்காயித்து எண்ணூற்று இருபத்து நான்கு மட்டும்) 13.03.2024 அன்று ஊராட்சி நிதிக்கணக்கில் மனுதாரர் செலுத்தியுள்ளார்.

எனவே, பார்வை 1 இல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறையால் தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையிலும், உரிய கட்டணங்கள் செலுத்தியதன் அடிப்படையிலும் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும், மேற்படி புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு மனை எண்: 1 முதல் 17 முடிய உள்ள மனைகளுக்கு மட்டும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) இப்புதிய வீட்டுமனைப்பிரிவு நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை திருச்சிராப்பள்ளி மாவட்டநகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
2) பார்வை 1 இல் காணும் கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப ஒப்புதலின்படி இணைத்து வரப்பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும், உரியகட்டணங்கள் செலுத்தியதன் அடிப்படையிலும் வரைபடத்தின்படி 1 முதல் 17 வரையிலான மணைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது.
3) ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் தற்போது ஒப்படைக்கப்படும் சாலைகள் மனுதாரர் தனது சொந்த செலவில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
4) அரசு புறம்போக்கு நிலம், நீர்நிலைகள் மறைக்கப்பட்டு மனைப்பிரிவு அமையுமாயின் இந்த ஒப்புதல் செல்லத்தக்கதல்ல.
5) முழுமை திட்டசாலை மற்றும் விரிவு அபிவிருத்தி திட்டசாலை இவற்றில் மனைப்பிரிவு அமையுமாயின் இந்த உத்தரவு செல்லத்தக்கதல்ல.

இணைப்பு: வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

T. [illegible]
தலைவர்
முத்தரசநல்லூர் ஊராட்சி

ஊராட்சி மன்றத்தலைவர்/செயல் அலுவலர்,
முத்தரசநல்லூர் ஊராட்சி

பெறுநர்:

திரு R. கணேசன்,
த/பெ. ராமசாமி கவுண்டர்,
நெ.3/39, காவேரி நகர்,
சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி-2

நகல்: இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
காஜாமலை, காஜா நகர்,
திருச்சிராப்பள்ளி-23

நகல்:

இணை சார்பதிவாளர்,
நெ.3 இணைசார் பதிவகம்,
டவுன் ஹால், திருச்சிராப்பள்ளி